யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 11 | வணிகக்கல்வியும் கணக்கீடும்

பெயர் / சுட்டெண் : ..... திரு.ச.சரவணபவன் BBA (Hons), PGDE, M.Ed

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

வணிகமொன்றின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பார்

1. வணிகமொன்றினது நிதிக்கூற்றுக்கள் என்றால் என்ன?

2. தனியுடைமை வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்களது பிரதான கூறுகள் இரண்டினையும் குறிப்பிடுக.

3. வணிகமொன்றினால் உழைக்கப்பட்ட செயற்பாட்டுப் பெறுபேற்றினை கணிப்பீடு செய்வதற்கான இரு படிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவை யாவை?

4. பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு கணிப்பிடப்படுகிறது என்பதினை குறிப்பிடுக.

i. மொத்த இலாபம்

ii. விற்பனை வருமானம்

iii. விற்பனைக்கு தயாராக இருந்த பொருள்களின் பெறுமதி

iv. விற்பனைக் கிரயம்

5. அபி வணிகத்தின் கணக்கேடுகளில் இருந்த படி 31.12.2019 இல் இருந்தபடி பின்வரும் மீதி எடுக்கப்பட்டிருந்தன.

	ரூ
01.01.2019 இல் இருப்பு (ஆரம்ப இருப்பு)	100000
கொள்வனவுகள்	480000
விற்பனைகள்	720000
உட்சுமைக் கூலி	50000
ஏற்றி இறக்கச் செலவு	10000

31.12.2019 இல் இருந்த படி இருப்பு ரூ 140000 என மதிப்பிடப்பட்டது.

www.ikedu.lk

வேண்டப்படுவன.

i. அபி வணிகத்தின் 31.12.2019 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பின்வருவனவற்றினது பெறுமானங்களைக் கணிப்பிடுக.

அ. விற்பனைக்கு தயாராகயிருந்த பொருள்களின் பெறுமதி

ஆ. விற்பனைக் கிரயம்

இ. மொத்த இலாபம்

ii. 31.12.2019 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அபி வணிகத்தின் வியாபாரக் கணக்கினை தயார் செய்க.

(நிலைக்குத்து அமைப்பினை பயன்படுத்துக)

6. ஏனைய வருமானங்கள் என்பதினால் விளங்கி கொள்வது யாது? உதாரணங்கள் தருக.

7. தேறிய இலாபம் எவ்வாறு கணிப்பிடப்படகிறது?

8. அசிதா வியாபாரத்தின் நிதியாண்டுக் காலம் 31.12.2019 இல் முடிவடைகின்றது. பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன.

i. விளம்பரச் செலவு ii. கொடுத்த கழிவு iii.காப்புறுதி
iv. இருப்பு அழிவு நட்டம் v. வங்கிக் கடன் வட்டி vi.வங்கிக்கட்டணம்
vii. மின்சாரம் viii. நிருவாகச் சம்பளம் ix.விற்பனையாளர் சம்பளம்
x. விளம்பரச் செலவு xi. மோட்டார் வாகன பெ.தேய்வு xii. உபகரண பெ. தேய்வு
xiii. தொலைபேசிக் கட்டணம் xiv. காசு மோசடி நட்டம்

மேற்கூறப்பட்ட செலவுகளை கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள தலைப்புக்களுக்கு அமைய

வகைப்படுத்திக் காட்டுமாறு நீர் கேட்கப்படுகின்றீர்.

விநியோகச் செலவுகள்	நிருவாகச் செலவுகள்	ஏனைய செலவுகள்	நிதிச் செலவுகள்

www.ikdu.lk

9. கதிரவனின் வியாபாரத்தின் நிதியாண்டு காலம் 31.12.2019 இல் முடிவடைகின்றது. இவ் வியாபாரத்தின்

பின்வரும் தரவுகள் உமக்கு தரப்படுகின்றன.

	ரூ		ரூ
மொத்த இலாபம்	400 000	பெற்ற கழிவுகள்	20 000
தரகு வருமானம்	10 000	விளம்பரச் செலவு	24 000
நிருவாகச் சம்பளம்	60 000	வட்டி வருமானம்	15 000
விற்பனை ஊழியர் சம்பளம்	48 000	காப்புறுதிக் கட்டணம்	32 000
வங்கிக் கடன் வட்டி	24 000	கட்டடதிருத்தச் செலவு	60 000
கொடுத்த கழிவுகள்	30 000	இயந்திரப் பெறுமானத்தேய்வு	30 000
மோட்டார் வாகனப் பெறுமானத்		வாடகைச்செலவு	24 000
தேய்வு	40 000	கொடுத்த வாடகை	24 000

வேண்டப்படுவன.

கதிரவனின் வியாபாரத்தின் 31.12.2019 இல் முடிவுற்ற ஆண்டிற்கான தேறிய இலாபத்தினை காட்டும் கூற்று

10. திலகர் வணிகத்தின் புத்தங்களிலிருந்து 31.12.2019 இல் இருந்த படி பின்வரும் மீதிகள் பிரித்தெடுக்கப்பட்டிருந்தன.

	ரூ		ரூ
விற்பனைகள்	750 000	காப்புறுதிக் கட்டணம்	12 000
கொள்வனவுகள்	300 000	அறவிட முடியாக் கடன்	8 000
உட்சுமைக் கூலி	15 000	எழுதுகருவிச் செலவு	9 000
வெளிச்சுமைக்கூலி	18 000	வட்டி வருமானம்	16 000
ஏற்றி இறக்கற் கூலி	5 000	தரகு வருமானம்	24 000
விளம்பரச் செலவு	24 000	கட்டடப் பெறுமானத்தேய்வு	6 000
சம்பளம்	64 000	மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வு	30 000
01.01.2019 இல் இருப்பு	100 000	அழிவடைந்த இருப்பு நட்டம்	10 000
வங்கிக்கடன் வட்டி	6 000	வங்கிக்கட்டணம்	4 000
இயந்திரப் பெறுமானத் தேய்வு	27 000	பெற்ற வாடகை	6 000

www.ikeau.lk

வேண்டப்படுவன.

(i) கீழ் காட்டப்பட்டுள்ளவற்றின் பெறுமானங்களை வெவ்வேறாகக் கணிப்பீடு செய்க.

(அ) விற்பனைக் கிரயம் (ஆ) மொத்த இலாபம்

(இ) ஏனைய வருமானங்கள் (ஈ) விநியோகக் கிரயங்கள்

(உ) நிருவாகச் செலவுகள் (ஊ) ஏனைய செலவுகள்

(எ) நிதிச் செலவுகள் (ஏ) தேறிய இலாபம்

(ii) 2019.12.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று. (இலாப நட்டக் கூற்று) இனை தயார் செய்க.

11. வணிகத்தின் நிதி நிலைமைக் கூற்று என்றால் என்ன?

12. வணிகமொன்றின் குறித்த நிதி வருட முடிவிலுள்ள உரிமைகள் மீதி எவ்வாறு கணித்து கொள்ளப்படுகிறது
என்பதைக் குறிப்பிடுக.

13. கபிலா வணிகத்தின் கீழ்வரும் தகவல்கள் 31.12.2019 இல் முடிவுற்ற வருடம் தொடர்பானது.

	ரூ
01.01.2019 இல் மூலதனம்	300 000
காசுப் பற்று	30 000
பொருள் பற்று	20 000
இவ் வருடத்திற்கான தேறிய இலாபம்	110 000

வேண்டப்படுவன.

31.12.2019 இல் உள்ளவாறான உரிமைகள் மீதி யாது?

14. காந்தா வணிக நிறுவனத்தின் நிதியாண்டு 2019.01.01 தொடக்கம் 2019.12.31 வரையிலான காலப்பகுதியாகும். பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன.

	ரூ		ரூ
2019.01.01 இல் மூலதனம்	450 000	ஆண்டுக்கான தேறிய இலாபம்	240 000
காணி கட்டடம்	320 000	நீண்ட கால முதலீடுகள்	60 000
தளபாடங்கள்	180 000	வங்கிக் கடன்	100 000
2019.12.31 இல் இருப்பு	100 000	வியாபார வருமதிகள்	90 000
பற்றுக்கள்	40 000	காசு	80 000
வியாபார சென்மதிகள்	60 000	கொடுக்க வேண்டிய செலவுகள்	20 000

வேண்டப்படுவன.

2019.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றினை தயார் செய்க. (நிலைக்குத்து வடிவிலான
முறையான மாதிரியமைப்பை பயன்படுத்துக.)

www.lkedu.lk

15. அஜந்தனது வணிகத்தின் 31.12.2019 இல் உள்ளவாறான பரீட்சை மீதி பின்வருமாறு காணப்படுகிறது

.

விபரம்	வரவு (ரூ)	செலவு (ரூ)
மூலதனம்		600 000
இயந்திர உபகரணம்	240 000	
தளபாடங்கள்	120 000	
கட்டடம்	300 000	
வியாபார வருமதிகள்	140 000	
வியாபார சென்மதிகள்		110 000
உட்சுமைக் கூலி	30 000	
கொள்வனவுகள்	320 000	
விற்பனைகள்		540 000
2019.01.01 இல் சரக்கிருப்பு	130 000	
காப்புறுதிக் கட்டணம்	20 000	
விற்பனைத் தரகு	10 800	
வங்கிக்கடன் (5 வருடங்களில் தீர்க்கப்பட வேண்டியது)		200 000
நிருவாகச் சம்பளம்	40 000	
வாடகை வருமானம்		40 000
கொடுத்த கழிவு	20 000	
பெற்ற கழிவு		30 000
பற்றுக்கள்	50 000	
வங்கிக்கட்டணம்	1 200	
பொருள் இழப்பு நட்டம்	10 000	
இயந்திரப் பெறுமானத் தேய்வு	12 000	
தளபாடப் பெறுமானத் தேய்வு	6 000	
கட்டடப் பெறுமானத் தேய்வு	6 000	
காசு	64 000	
	152 000	152 000

கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துப் பொருள்களும் விற்பனையாகியுள்ளன. ஏனக் கருதுக.

வேண்டப்படுவன.

(i) 2019.12.31 இல் முடிவடையும் ஆண்டுக்கான வருமானக் கூற்று.

(ii) 2019.12.31 தினத்திற்கான நிதி நிலைமைக் கூற்று.

***

www.ieduk.lk